1972 மார்ச் 15].

மாயூரம் அரசு மருத்துவ மனையில் தண்ணீர் தட்டுப்பாடு

*507 வின.—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் அரசினர் மருத்துவமனையில் ஏற்பட்டுள்ள தண்ணீர் தட்டுப் பாட்டைப் போக்க அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: வீடுகளுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதற்காக அமைக்கப்பட்டுள்ள குழாய்களின் வழியாக இந்த அரசு மருத்துவமனைக்கும் குடிநீர் வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

திரு. கு. காமாட்சி: தலைவர் அவர்களே, பொதுவாக, மருந்தகங்கள், மருத்துவமனைகளில் தண்ணீரும் மின்சாரமும் மிக அவசியமானதாக இருக் கின்றன. ஆகவே, தமிழ்நாட்டில் இருக்கிற மருத்துவமனைகளிலும், மருந்தகங்களிலும் இந்த வசதி இல்லாத இடங்களில் ஏற்படுத்திக்கொடுக்க அரசு முன்வருமா? அதற்கு ஏதாவது திட்டம் இருக்கிறதா? அரசு இத்தகைய திட்டத்தை தயாரித்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, மருத்துவமனைக்கு நிச்சயமாகப் பாதுகாக்கப்பட்ட குடிநீர்தான் மிக அவசியமாகும். ஒரு நகரத் திற்கே பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்படுகிறபோது அந்த நகரத்திற்கு இன்றியமையாத ஒன்றாக இருக்கிற மருத்துவ மனைக்கு அந்த நகரத்திறகுக் கிடைக்கிற பாதுகாக்கப்பட்ட தண்ணீரிலிருந்து கிளைக்குழாய்கள் மூலமாக தண்ணீர் கிடைத்தாகவேண்டும். அதற்கான ஏற்பாடுகளை மாயூரத்தைப் பொறுத்தவரையில் செய்யப்பட்டு வருகிறது. இதற்காக என்று தனியாகத் திட்டம் செய்வதாக இருந்தால் மிகப் பெரிய செலவும் ஆகும், அது ஏற்புடையது தும் அல்ல.

மணல்மேட்டிலுள்ள அரசு மருந்தகம்

*508 வின.—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் தொகுதி மணல்மேட்டில் உள்ள அரசினர் மருந்தகத்திற்கு மின் சார வசதி செய்யப்பட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: இல்லை.